கவனிக்க.– 19.09.2025 ஆந் திகதிய 2455 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2456 - 2025 සැප්තැම්බර් මස 26 වැනි සිකුරාදා - 2025.09.26

2456 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 444 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 452 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2025, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ் வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

**இலங்கை மகாவலி அதிகார சபை**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட மானியக் கடிதத்தினை இரத்துச் செய்வதற்கான அறிவித்தல் - (பிரிவு 104) - 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க காணித் திருத்தத்திற்கான அறிவித்தல்**

வடமத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்தின், இலங்கை மாகாவலி அதிகார சபையின் எச் பிரிவின் குடியிருப்பு வியாபார முகாமையாளராகிய இமிஹாமி முதியன்சேலாக்கே உபய கல்யாண குமார ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதியினால் 2008.08.07 ஆந் திகதி வழங்கப்பட்ட குரு/எச்/மீக/பிர/3178 ஆம் இலக்க என்ற நன்கொடைப் பத்திரத்தின் உரிமையாளரான அந்தரவெவ, வெலியாவ, மீகலேவ ரத்நாயக்க முதியன்ஸேலாகே குடா பண்டா அவர்களுக்குக் கையளித்ததுடன், குருநாகல் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 877 எனும் இலக்கத்தின் கீழ் 2009.04.21 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்ட பின்வரும் துணைப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு வாரிசாக சட்டபூர்வமாக உரிமையுள்ள நபர் இல்லாத பட்சத்தில் அல்லது ஒருவர் இருந்தாலும் கூட அவர் உரிமையுள்ள வாரிசாக விரும்பவில்லை என்பதால் குறித்த காணிக்கு சட்டபூர்வமாக தகுதியுடைய வாரிசாக யாரும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.எனவே, மேற்படி சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ், மேற்படி கொடுப்னவு பத்திரத்தை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். இதுதொடர்பில் ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் அதனை 2025.10.17 ஆந் திகதிக்கு முன் நீங்கள் எனக்கு எழுத்துமூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

குருநாகல் நிருவாக மாவட்டத்தின் எதாடுவெவ பிரதேச செயலக பிரிவில் 45, கிழக்குக் கோறளை 103 வெலியாவ கிராம அலுவலர் பிரிவின் வெலியாவ என்ற கிராமத்தில அமைந்துள்ள, குருநாகல் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பிலுள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இ. நி. சி. 3976/03 என்ற எல்லை வரைபடத்திலுள்ள ...... ஆல் தயாரிக்கப்பட்ட .............. ஆம் இலக்க காணித்துண்டின் ............. ஆல் தயாரிக்கப்பட்ட .............. 456 ஆம் இலக்க நிலத் துண்டாக மதிப்பிடப்பட்டுள்ள, 0.260 ஹெக்டயர் அளவுள்ள அரசாங்கத்தின் காணி பின்வருமாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு : இலக்கம் 459, 455 காணித் துண்டுகள்;
கிழக்கு : இலக்கம் 455 மற்றும் 3982 வெலியாவ;
தெற்கு : இலக்கம் 457 மற்றும் 3982;
மேற்கு : இலக்கம் 457, 459.

ஐ. எம். உபய கல்யான குமார,
குடியிருப்பு திட்ட முகாமையாளர்,
இலங்கை மகாவலி அதிகாரசபை,
எச் - வலயம்,
தம்புத்தேகம.

2025, மே 26.

09 - 229

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாணம் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதி காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) டீ. ஏ. பீ. தனன்சூரிய ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச்

சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1987 யூன் 04 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள நுவ/பிர/4358 ஆந் இலக்க அளிப்புப்பத்திரத்தின். உரிமையாளரான மாகஸ்தொட்ட 1 V ஒழுங்கை என்னும் முகவரியில் வசிக்கும் திரு அந்தோனி இரம்லான்சி இராஜுடீன் என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் நுவ/11/980/87 ஆம் இலக்கத்தின் கீழ் 1988 ஒற்றோபர் 22 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியாக உரிமையாளர் இல்லாத காரணத்தினால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமயாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2025.10.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நுவரெலியா நிருவாக மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் ஒயபலாத பற்றிலுள்ள/ கோரளையிலுள்ள பிலெக்பூல் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பிலெக்பூல் என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நுவரேலியா நில அளவையாளர் பொறுப்பில் மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ............ ஆம் இலக்க வெளிக்களத் தாளில் பி.பி. நு 851 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் தயாரிக்கப்பட்ட இலக்கமுடைய வரி விளக்கப்படத்தில் 48 ஆம் காணித் துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் ஹெக்டயார் 0.112, றூட் 00, பேர்ச் 00 விஸ்தீரணமுள்ளதும் மாகஸ் தொட்ட IV ஒழுங்கை கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரசாங்க காணித் துண்டு.

வடக்கு : பி. பி. நு 851 வரைபடத்தில் குறிப்பிடப்படுள்ள துண்டு இலக்க 45;
கிழக்கு : பி. பி. நு 851 வரைபடத்தில் குறிப்பிடப்படுள்ள துண்டு இலக்க 37;
தெற்கு : பி. பி. நு 851 வரைபடத்தில் குறிப்பிடப்படுள்ள துண்டு இலக்க 52;
மேற்கு : பி. பி. நு 851 வரைபடத்தில் குறிப்பிடப்படுள்ள எல்லைக் கற்கள்.

டீ. ஏ. பீ. தனன்சூரிய,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

2023, திசெம்பர் 27.

09 - 242/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாணம் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) டீ. ஏ. பீ. தன்னசூரிய ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தம சனாதிபதி அவர்களினால் 1987 ஒற்றோபர் 15 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள நுவ/பிர/4670 ஆந் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான பிலெக்பூல் (ருவன் எலியா) என்னும் முகவரியில் வசிக்கும் திருமதி ரத்னாயக முதியன்சேலாகே சமரவதி என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் நுவ/11/53/88 இலக்கத்தின் கீழ் 1988/1/27 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரத்திணால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமயாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்க படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2025.10.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நுவரெலியா நிருவாக மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் ஒயபலாத பற்றிலுள்ள/ கோரளையிலுள்ள பிலெக்பூல் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பிலெக்பூல் (ருவன் எலியா) என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நுவரெலியா நில அளவையாளர் பொறுப்பில் மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 69/6/1 மற்றும் 69/6/3 ஆம் இலக்க வெளிக்களத் தாளில் பி.பி. நு 851 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் தயாரிக்கப்பட்ட இலக்கமுடைய வரி விளக்கப்படத்தில் 48 ஆம் காணித் துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் ஹெக்டயார்/ ஏக்கர் 0.082 றூட் 00 பேர்ச் 00 விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அராங்க காணித் துண்டு.

வடக்கு : பி. பி. நு 851 வரைபடத்தில் குறிப்பிடப்படுள்ள துண்டு இலக்கம் 41;
கிழக்கு : பி. பி. நு 851 வரைபடத்தில் குறிப்பிடப்படுள்ள மாகஸ்தொட்ட தோட்டம்;
தெற்கு : பி. பி. நு 1008 வரைபடத்தில் குறிப்பிடப்படுள்ள துண்டு இலக்கம் 49;
மேற்கு : பி. பி. நு 1008 வரைபடத்தில் குறிப்பிடப்படுள்ள துண்டு இலக்கம் 37.

டீ. ஏ. பீ. தனன்சூரிய,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

2023, நவெம்பர் 24.

09 - 242/2

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாணம் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) டீ. ஏ. பீ. தனன்சூரிய ஆகிய நான் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1985 சனவரி 18 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள நுவ/பிர/2556 ஆந் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான சீதாஎலியா என்னும் முகவரியில் வசிக்கும் திரு. விஜெரத்ன ஹளுகே சயிமன் என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் நுவ/12/1602/86 ஆம் இலக்கத்தின் கீழ் 1986/09/25 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தினால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரி மயாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2025.10.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நுவரெலியா நிருவாக மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரிவின் கடவத்சதர பற்றிலுள்ள/ கோரளையிலுள்ள கொரண்டிஹெல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சீதாஎலியா என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட பி. பி. நு 845 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 07 ஆம் காணித் துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் ஹெக்டயார் 0.184, றூட் 00, பேர்ச் 00 விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரசாங்க காணித் துண்டு.

வடக்கு : பி.பி. நு 845 துண்டு இலக்கம் 08;
கிழக்கு : பி.பி. நு 845 துண்டு இலக்கம் 09;

தெற்கு : பி.பி. நு 845 துண்டு இலக்கம் 14;
மேற்கு : பி.பி. நு 845 துண்டு இலக்கம் 08.

டீ. ஏ. பீ. தனன்சூரிய,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

2025, பெப்புருவரி 11.

09 - 242/3

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாணம் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) டீ. ஏ. பி. தனன்சூரிய ஆகிய நான் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1985 சனவரி 18 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள நுவ/பிர/2629 ஆந் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான பிலெக்பூல் என்னும் முகவரியில் வசிக்கும் திரு. மயிகள் வஜீம் விலியம்ஸ் என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் நுவ11/1554/86 ஆம் இலக்கத்தின் கீழ் 1986/09/25 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தினால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2025.10.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நுவரெலியா நிருவாக மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் கடவத்சதர பற்றிலுள்ள/ கோரளையிலுள்ள பிலெக்பூல் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பிலெக்பூல் என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ......... ஆம் இலக்க வெளிக்களத் தாளில் பி.பி.நு. 832 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் தயாரிக்கப்பட்ட வரி விளக்கப்படத்தில் 15 ஆம் காணித் துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் ஹெக்டயார் 0.174, றூட் 00, பேர்ச் 00 விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான மகொட சட்டம் எனும் அரசாங்க காணித் துண்டு.

வடக்கு : பி.பி. நு 832 வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு இலக்கம் 26;
கிழக்கு : பி.பி. நு 832 வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு இலக்கம் 26 உம் 21;
தெற்கு : பி.பி. நு 832 வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு இலக்கம் 20;
மேற்கு : பி.பி. நு 832 வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு இலக்கம் 14.

டீ. ஏ. பீ. தனன்சூரிய,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

2024, ஒற்றோபர் 10.

09 - 242/4

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாணம் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) டீ. ஏ. பீ. தனன்சூரிய ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1999, மே 10ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/நுவ/1675 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான நவஜனபதய என்னும் முகவரியில் வசிக்கும் திருமதி சஹருவன் பீபீ என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் நுவ/41/786/99 ஆம் இலக்கத்தின் கீழ் 1999.08.11 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தினால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமயாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2025.10.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நுவரெலியா நிருவாக மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரிவின் கடவத்சதர பற்றிலுள்ள/ கோரளையிலுள்ள வின்டிகோனர் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த நவஜனபதய என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நுவரெலியா பிரதேச செயளாலரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளரினரல் தயாரிக்கப்பட்ட நு/வி/86/83 ஆம் இலக்கமுடைய வரி விளக்கப்படத்தில் 117 ஆம் காணித் துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் ஹெக்டயார்/ ஏக்கர் 00, றூட் 00, பேர்ச் 20 விஸ்தீரணமுள்ளதும் மாகோட சட்டம் என்று அழைக்கப்படும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரசாங்க காணித் துண்டு.

வடக்கு : பொது வீதி;
கிழக்கு : இலக்கம் 116 காணி;
தெற்கு : இலக்கம் 126 காணி;
மேற்கு : இலக்கம் 118 காணி.

டீ. ஏ. பீ. தனன்சூரிய,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

2024, ஒற்றோபர் 07.

09 - 242/5

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) டீ. ஏ. பீ. தனன்சூரிய ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1995 நவெம்பர் 08 ஆந் திகதி

வழங்கப்பட்டுள்ள மத்திய/நுவ/628 ஆந் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான பிலெக்பூல், புதிய வீடமைப்பு தொகுதி என்னும் முகவரியில் வசிக்கும் திருமதி கலுஆரச்சி அப்புஹாமிலாகே ஜயமெணிகே என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் நுவ11/1133/95 ஆம் இலக்கத்தின் கீழ் 1995.12.18 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியாக உரிமையாளர் இல்லாத காரணத்தினால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. அதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2025.10.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நுவரெலியா நிருவாக மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் ஒயபலாத பற்றிலுள்ள/ கோரளையிலுள்ள விண்டிகோணர் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பிலெக்பூல் என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நிமல் லியனகே நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட நு/வீ/86/83 ஆம் இலக்க வெளிக்களத் தாளில் 135 ஆம் இலக்க துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும்- ஏக்கர் - றூட் - பேர்ச் 20 விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.

வடக்கு : வீதி;
கிழக்கு : லொட் எண் 136;
தெற்கு : லொட் எண் 144;
மேற்கு : லொட் எண் 134.

டீ. ஏ. பீ. தனன்சூரிய,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

2024, ஓகத்து 15.

09 - 242/6

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் உறுப்புரையின் கீழ் வெளியிடப்பட்ட பிரதான ஆவணத்தை தடை செய்தல் 104 ஆவது உறுப்புரை தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபை நுவரெலியா மாவட்ட வலப்பனை பிரதேச செயலக பிரிவின் பிரதேச செயலாளரான எஸ். பி. லிந்தகுபுர எனும் நான் காணி அபிவிருத்தி சட்டத்தின் 19 (4) உப உறுப்புரைக்கு அமைய மதிப்புக்குரிய சனாதிபதி அவர்களால் 1986.08.06 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள இலக்கம் நு/வ/பி/3059 எனும் மூல ஆவணத்தின் உரிமையாளரான வதுமுள்ள, மஹவ்வா எஸ்டேட் வசிக்கும் சந்தனம் அறுலப்பன் வழங்கப்பட்டு நுவரெலியா மாவட்ட பதிவு காரியாலயத்தின் இல. வல/15/22/87 இன் கீழ் 1987.03.02 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட கீழ்வரும் உப உறுப்புரையில் காணப்படும் காணிக்கு வாரிசு ஒருவர் சட்டப்படி இன்மையால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருந்த போதிலும் அவர் வாரிசாக விருப்பமின்மையால் வாரிசு ஒருவர் இல்லை என அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இவ் ஆவணத்தை உரிய சட்டத்தின் 104 ஆவது உறுப்புரையின் கீழ் நிராகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன். இது தொடர்பில் எதிர்ப்புகள் இருக்குமாயின் 2025.10.17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் எனக்கு அறியத்தரவும்.

**உப அட்டவணை**

நுவரெலியா நிருவாக மாவட்டத்தில் வலப்பனை செயலாளர் பிரிவின் ஒயபலாத்த பிரிவில் 516 பி எகொடகந்த கிராம அலுவலர் பிரிவில் எகொடகந்த எனும் கிராமத்தில் அமைந்துள்ள - வசமுள்ள மற்றும் நில அளவையாளரால் தொகுப்பு எண் மு. ப. நு831 கொண்ட வயல் நில பத்திரத்தில் - தொகுப்பு எண் எனும் -தொகுதியின் திட்டத்தில் தொகுப்பெண் 37 கொண்ட வரைபு அட்டவணையில் இலக்கம் கொண்ட நிலத்துண்டாக அடையாளப்படுத்தப்பட்டு உள்ளதுடன் அளவில் ஹெக்டெயார்/ ஏக்கர் 0.082 விஸ்தீரணமுள்ள கீழுள்ளவாறு எல்லைகளைக் கொண்ட அரசாங்கக் காணி

வடக்கு : மு. ப. நு 831 துண்டு இலக்கம் 24;
கிழக்கு : மு. ப. நு 831 துண்டு இலக்கம் 38;
தெற்கு : மு. ப. நு 831 துண்டு இலக்கம் 43;
மேற்கு : மு. ப. நு 831 துண்டு இலக்கம் 36.

எஸ். பீ. லிந்தகுபுர,
பிரதேச செயலாளர்,
வலப்பனே.

2024, சனவரி 31.

09 - 246

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபை நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் சிதாரா ருவினி கமகே ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ், அதி உத்தம சனாதிபதி அவர்களால் 11.08.1994 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/அகோ/505 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான மொரஹேனகம எனும் முகவரியில் வசிக்கும் ஹபுகொட வன்னகுராலலாகே பியசிரி என்பவருக்கு கையளிக்கப்பட்டு, கம்பளை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் எல். டீ. ஓ. பீ 05/241 ஆம் இலக்கத்தின் 04.11.1994 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2025.10.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் அம்பகமுவ / கோறளையிலுள்ள கெஹெல்வராவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மொரஹேனகம எனும் கிராமத்தில அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வெளிக்களத் தாளில் எப். வி. பி. 115 மேலதிக 26 வது வரைபடத்தில் 838 இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் ஹெக்டயார் 0.323 விஸ்தீரணமுள்ளதும் அலுபோதெனிய மூகலான என்று அழைக்கப்படும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு -

வடக்கு : எப். வி. பி. 115 மேலதிக 26 ஆவது வரைபடத்தில் 647, 836 மற்றும் 837 இலக்க காணித்துண்டு;
கிழக்கு : எப். வி. பி. 115 மேலதிக 26 ஆவது வரைபடத்தில் 837, 786 மற்றும் 839 இலக்க காணித்துண்டு;
தெற்கு : எப். வி. பி. 115 மேலதிக 26 ஆவது வரைபடத்தில் 839 மற்றும் 840 இலக்க காணித்துண்டு;
மேற்கு : எப். வி. பி. 115 மேலதிக 26 ஆவது வரைபடத்தில் 466 மற்றும் 647 இலக்க காணித்துண்டு.

சிதாரா ருவினி கமகே,
பிரதேச செயலாளர்,
அம்பகமுவ கோரளை,
கினிகத்ஹேனை.

2024, சனவரி 22.

09 - 247/1

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபை நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ஜயசிங்க முதியன்சலாகே சமில இன்திக ஜயசிங்க ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின், கீழ் அதி உத்தம சனாதிபதி அவர்களால் 1995.08.21 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/அகோ/635 ஆந் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான வடவலை எனும் முகவரியில் வசிக்கும் லொகு யத்தெஹிலாகே பிரியந்த விஜயபால என்பவருக்கு கையளிக்கப்பட்டு, கம்பளை மாவட்ட பதிவாளர் அலுவலத்தில் எல். டீ. ஓ. பீ 06/245 ஆம் இலக்கத்தின் கீழ் 1995.11.10 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2025.10.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

மத்திய மாகாணம் நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் அம்பகமுவ / கோறளையிலுள்ள வடவலை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வடவலை எனும் கிராமத்தில அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வெளிக்களத் தாளில் பி. பி. நு 1674 வரைபடத்தில் 17 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் ஹெக்டயார் 0.193 விஸ்தீரணமுள்ளதும் வடவலை தோட்டம் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு-

வடக்கு : கா. து. 18, 6 2/2, 16;
கிழக்கு : கா. து. 16, 46;
தெற்கு : கா. து. 46, 43, 18;
மேற்கு : கா. து. 18.

ஜே. எம். சீ. ஐ. ஜயசிங்க,
பிரதேச செயலாளர்,
அம்பகமுவ கோரளை,
கினிகத்ஹேன.

2025, மார்ச்சு 05.

09 - 247/2

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ஆகிய ஆர். ஏ. நதீர லக்மால் ஆகிய நான், காணி அபிவிருத்து கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ், அதி உத்தம சனாதிபதி அவர்களினால் 2001.11.20 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள நு/கொத்/தப/பிர/கொ/80 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான ஹபுகச்தலாவ - தம்பகல்ல முகவரியில் வசிக்கும் சீலகம கெதர டின்கிரிஅம்மா என்பவருக்கு கையளிக்கப்பட்டு, நுவரெலியா மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் கொத் 24/189/2002 ஆந் இலக்கத்தின் கீழ் 2002.03.01 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக

இருக்க இருப்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2025.10.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நுவரெலியா நிர்வாக மாவட்டத்தில் கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவின் திஸ்பனை கோரளேயில் உள்ள 460 ஹபுகச்தலாவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அகஸ்வெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளது, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கபட்டு நு. 912 ஆந் இலக்க வெளிக்களத்தாளில் - என்பவரால் தயாரிக்கப்பட்டு 27 ஆம இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் - காட்டப்பட்டுள்ளது 0.111 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு - தம்பகல்ல தோட்டம்: -

வடக்கு : காணித் துண்டு இலக்கம் 26, 04 மற்றும் பி.பி.நு. 743 இன் காணித் துண்டின் இலக்கம்;
கிழக்கு : பி.பி.நு. 743 இன் காணித் துண்டு இலக்கம் 01 மற்றும் காணித் துண்டு இலக்கம் 28;
தெற்கு : காணித் துண்டு இலக்கம் 28 மற்றும் 29;
மேற்கு : காணித் துண்டு இலக்கம் 26.

ஆர். ஏ. நதீர லக்மால்,
பிரதேச செயலாளர்,
திஸ்பனே உப அலுவலகம்.

2023, திசெம்பர் 02.

09 - 248

# நானாவித காணி அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/78016.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: EP/28/LB/L7/LS/BAT/KPS/19.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவின் இலக்கம் 209 பிள்ளைவெளி மாதா பூந்தோட்டம் கிராம அலுவலர் பிரிவின் 270053 ஆம் இலக்க கடத்திரல் வரைபடத்தின் 29 வலயங்களில் 21 ஆம் வலயத்தின் பத்திர இலக்கம் 1 இன் 167 ஆம் இலக்க துண்டிற்கான நில அளவை வரைபடத்தில் 01 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசாங்க் காணித்துண்டை மதம் சார்ந்த நடவடிக்கைக்காக ஸ்ரீ சிவ முத்து மாரியம்மன் கோயிலின் நம்பிக்கைப் பொறுப்பு சபையினால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வடக்கு: துண்டு இல.147;
கிழக்கு: துண்டு இல. 147;
தெற்கு: துண்டு இல. 166;
மேற்கு: துண்டு இல.166.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது:

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.07.23 ஆம் திகதி முதல் முன்னோக்கி)

வருடாந்த குத்தகைத் தொகை : தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டில் காணியின் மேம்படுத்தப்படாத பெறுமதியின் 1/2% ஆகும்;

(ஆ) குத்தகக்குப் பெற்றுக்கொள்பவர்கள் குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்திடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் காணியை மதம் சார்ந்த நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகைகைய முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டி. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, செத்தெம்பர் 08.

09 - 223

---

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/74072.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: EP/28/LB/L7/LS/BAT/KPS/10.

### 21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவின் இலக்கம் புனாணை மேற்கு கிராம அலுவலர் பிரிவின் முள்ளிவட்டான் கிராமத்தில் குடியிருப்பு அலுவரால் தயாரிக்கப்பட்ட தோராயமான சுவட்டு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 0.75 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட அரசாங்க காணியை சமய நடவடிக்கைகளுக்காக ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை எனும் பெயரில் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வடக்கு: State Land;
கிழக்கு: Path;
தெற்கு: State Land;
மேற்கு: State Land.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகள் மற்றும் கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது :

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.07.23 ஆம் திகதி முதல் முன்னோக்கி)

வருடாந்த குத்தகைத் தொகை : தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டில் காணியின் மேம்படுத்தப்படாத பெறுமதியின் 1/2% ஆகும்;

(ஆ) குத்தகக்குப் பெற்றுக்கொள்பவர்கள் குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்திடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் காணியை சமய நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

